//தேர்வுகள் அவசரம் //

சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல் முறைகள் சென்னை -08

ந.க.எண் 3177 /அ5/204 நாள் 08.05.2024

பொருள் பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- ஜீன் /ஜீலை 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகள்- மார்ச் 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் எழுதி தோல்வியடைந்த / வருகை புரியாத தேர்வர்களிடமிருந்து விண்ணப்பிக்க தகுதியுள்ள தனித்தேர்வர்களிடமிருந்து இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்தல், அனைத்து வகை தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு தெரிவித்தல்- தொடர்பாக

பார்வை சென்னை -06 , அரசுத்தேர்வுகள் இயக்ககத்தின் செய்தி குறிப்பு நாள் 08.05.2024

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்கத்தின் செய்தி குறிப்பு அனைத்து வகைப்பள்ளிகளுக்கு ம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

<u>பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்</u>

மார்ச் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு ( +1 Arrear)/ மேல்நிலை இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களாக எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத அவர்கள் பயின்ற பள்ளிக்கு நேரில் சென்று 16.05.2024 (வியாழக்கிழமை முதல் 01.06.2024(சனிக்கிழமை) வரையிலான நாட்களில் ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5,00 மணிக்குள் விண்ணப்பிக்கவேண்டும் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

<u>தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்</u>

ஜீன் /ஜீலை 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துனணத் தேர்விற்கு தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுள்ள தனித்தேர்வர்களும் மற்றும் மார்ச் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு ( +1 Arrear) மேல்நிலை இரண்டாம் ஆண்டு ( +2) பொதுத்தேர்வினை எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்களும் 16.05.2024 முதல் 01.06.2024 (சனிக்கிழமை) ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5,00 மணிக்குள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் (Service Centres) வாயிலாக விண்ணப்பிக்கவேண்டும் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது

விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத்தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service Centres)

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் (Government Examinations Service Centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்காக தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம், மேலும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகம்/ அனைத்து மாவட்டக்கல்வி அலுவலகங்கள் மற்றும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுக்கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏற்கனவே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் மற்றும் மேல்நிலை முதலாமாண்டு(+1) தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ50/- வீதம் தேர்வுக்கட்டணமும், அதனுடன் இதரக்கட்டணமாக ரூ35/- செலுத்த வேண்டும் | ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ 70/- |
| 2 | மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தேர்வர்கள் | தேர்வுக்கட்டணம் ரூ 150/- இதரக் கட்டணம் ரூ35/- மொத்தம் 185/- | ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ 70/- |

தேர்வுக்கட்டணம் மற்றும் ஆன்லைன் பதிவுக்கட்டணத்தினை சேவை மையத்தில் பள்ளியில் பணமாகச் செலுத்த வேண்டும்.

சிறப்பு அனுமதித்திட்டம்

16.05.2024 ( வியாழக்கிழமை) முதல் 01.06.2024 ( சனிக்கிழமை) வரையிலான நாட்களில் ஜூன்/ஜுலை 2024 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள் சிறப்பு அனுமதித் திட்டத்தில் உரிய கட்டணத் தொகையுடன் 03.06.2024 (திங்கட்கிழமை) மற்றும் 04.06.2024 ( செவ்வாய்க்கிழமை) ஆகிய நாட்களில் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

சிறப்பு அனுமதிக்கட்டணம் ரூ1000/- ( 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று தேர்ச்சிப்பெறாத/ வருகைப்புரியாத மாணவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது)

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுகள் விநியோகம்

ஆன்லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு தேர்வர்களுக்கு ஒப்புகை ச் சீட்டு வழங்கப்படும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை ( Application Number ) பயன்படுத்தியே அரசுத்தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை ( Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால் ஒப்புகைச்சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்

தேர்வர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்,

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்குத் தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்டப்பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது,

மேலும் இத்தேர்வுகள் சார்ந்த விரிவான தகவல்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம். என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது

எனவே இதனை அனைத்து வகைப்பள்ளித்தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் தங்கள் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு வகுப்பு ஆசிரியர்கள் மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8-5-24

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

8-5-24.

பெறுநர்

அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் சென்னை மாவட்டம்

நகல்

1 கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை மாவட்டம் தகவலுவக்காகவும் அனுப்பப்படுகிறது,

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது,